செ.வெ.எண்:14 நாள்:16.12.2019

## கரூர் மாவட்டம்

## கரூர் மாவட்ட தேர்தல் பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள முனைவர்.திரு.ந.வெங்கடாசலம்.இஆப., அவர்கள், தேர்தல் பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.த.அன்பழகன்.இஆப., அவர்களுடன் ஆலோசனை நடத்தினார்

அதன் விபரம் வருமாறு:

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, 27.12.2019 மற்றும் 30.12.2019 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக அனைத்து ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தல்கள் நடத்தப்படவுள்ளது. மாவட்டந்தோறும் இந்திய ஆட்சிப்பணி நிலையிலான அலுவலர்களை தேர்தல் பார்வையாளர்களாக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது. அதனடிப்படையில், கரூர் மாவட்டத்திற்கான தேர்தல் பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள தமிழகஅரசின் சமூகப்பாதுகாப்புத்திட்ட ஆணையர் முனைவர்.திரு.ந.வெங்கடாசலம்.இஆப., அவர்கள் இன்று (16.12.2019) கரூர் மாவட்டத்திற்கு வருகை தந்தார்.

ஊரக உள்ளாட்சித் தேர்தல் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும், எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஊரக உள்ளாட்சிக்கான தேர்தல் பார்வையாளர் அவர்கள், மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.த.அன்பழகன்.இஆப., அவர்களுடன் விரிவாக ஆலோசனை நடத்தினார்.

நடைபெறவுள்ள ஊரக உள்ளாட்சித் தேர்தலுக்காக செய்யப்பட்டுள்ள முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் குறித்தும், வாக்குச்சாவடி மையங்கள், வாக்காளர்களுக்கு செய்யப்பட்டுள்ள அடிப்படைவசதிகள் குறித்தும் விரிவாக ஆலோசனை நடத்தினார்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இரா.பாண்டியராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.எஸ்.கவிதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (உள்ளாட்சித் தேர்தல்) திரு.செல்வராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.